செ.வெ.எண்: 22 நாள்: 11.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற பேறறிஞர் அண்ணா விரைவு மிதிவண்டி போட்டியில் முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மச்சுவாடி அண்டக்குளம் சாலையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், புதுக்கோட்டை மாவட்ட பிரிவு, மாவட்ட மிதிவண்டி கழகம், சங்கமம் ஜூனியர் சேம்பர், செந்தூரான் மற்றும் என்.எம் கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான பேறறிஞர் அண்ணா விரைவு மிதிவண்டி போட்டிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.09.2016) நடைபெற்றது.

இந்த மாவட்ட அளவிலான பேறறிஞர் அண்ணா விரைவு மிதிவண்டி போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு காலஞ்சென்ற முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் பேரறிஞா அண்ணா அவர்களின் பிறந்தநாளினை சிறப்பிக்கும் வகையில் அண்ணா விரைவு மிதிவண்டி போட்டிகள் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் மச்சுவாடி அண்டக்குளம் சாலையில் மாவட்ட அளவிலான அண்ணா விரைவு மிதிவண்டி போட்டிகள் ஆண், பெண் இருபாலருக்கும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.



இதில் 13 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் (15 கி.மீ தூரம்) கலந்து கொண்ட 17 மாணவர்களில், புதுக்கோட்டை ஆர்.சி.நடுநிலைப்பள்ளி மாணவன் சந்தோஷ் முதலிடத்தையும், வடவாளம் அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவன் குகன் இரண்டாம் இடத்தையும், புதுக்கோட்டை தூயமரியன்னை மேல்நிலைப்பள்ளி மாணவன் கிஷோர் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் (20 கி.மீ தூரம்) கலந்து கொண்ட 16 மாணவர்களில், கற்பகவிநாயகா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவன் விக்னேஷ்குமார் முதலிடத்தையும், கைக்குறிச்சி வெங்கடேஷ்வரா மெட்ரிக் பள்ளி மாணவன் கேசவன் இரண்டாம் இடத்தையும், முள்ளூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் அருண்பாண்டியன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் (20 கி.மீ தூரம்) கலந்து கொண்ட 8 மாணவர்களில், வடவாளம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் சக்திவேல் முதலிடத்தையும், புதுக்கோட்டை டி.இ.எல்.சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவன் நிஷாத்அகம்மது இரண்டாம் இடத்தையும், வடவாளம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் ரவிக்குமார் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

மேலும் 13 வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கு நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் (10 கி.மீ தூரம்) கலந்து கொண்ட 6 மாணவிகளில் புதுக்கோட்டை சுப்புராமையயர் நடுநிலைப்பள்ளி மாணவி ஜெயலெட்சுமி முதலிடத்தையும், இராணியார் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி மதுலேகா இரண்டாம் இடத்தையும், லிட்டில் பிளவர் மேல்நிலைப்பள்ளி மாணவி அஷ்வினி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 15 வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கு நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் (15 கி.மீ தூரம்) கலந்து கொண்ட 13 மாணவிகளில் புதுக்கோட்டை இராணியார் மேல்நிலைப்பள்ளி மாணவி பாண்டீஸ்வரி முதலிடத்தையும், நச்சாந்துப்பட்டி மேல்நிலைப்பள்ளி மாணவி அபிராமி இரண்டாம் இடத்தையும், இராணியார் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி அன்னபூரணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 17 வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கு நடைபெற்ற மிதிவண்டி போட்டியில் (15 கி.மீ தூரம்) கலந்து கொண்ட 4 மாணவிகளில் புதுக்கோட்டை

இராணியார் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகள் பவானி முதலிடத்தையும், நிவேதா இரண்டாம் இடத்தையும், பொன்னி மூன்றாம் இடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளனர்.

..2..



இந்த மாவட்ட அளவிலான அண்ணா விரைவு மிதிவண்டி போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டதுடன் இப்போட்டியில் முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவில் நடைபெறவுள்ள அண்ணா விரைவு மிதிவண்டி போட்டியில் கலந்து கொள்ள உள்ளனர். மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கனைகள் போட்டிகளில் வெற்றி பெற்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.சா.வாஞ்சிநாதன், ஜே.சி சங்கமம் மண்டலப்பொறுப்பாளர் திரு.வீரமணி, செந்தூரரான் கல்விக்குழும தாளாளர் திரு.ஆர்.வைரவன், என்.எம்.கல்விக்குழுமத்தாளாளர் திரு.முகம்மதுரியாலுதீன் மற்றும் மாவட்ட மிதிவண்டி கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**